# தமிழ்நாடு அரசு

# நெடுஞ்சாலைத் துறை

# கோயமுத்தூர் வட்டம்

## *முன்தகுதி நிர்ணயம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு*

## *இரண்டு உறைகள் முறை*

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 30/2005—2006 / தவஅ / நாள் 13.7.2005

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), கோவை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு கீழ்க்கண்டவாறு மூடி முத்திரையிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் கதவு எண் 1653, நெடுஞ்சாலை வளாகம் திருச்சி சாலை, கோவை—18 ல் உள்ள அவரது அலுவலகத்தில் ***4.8.2005*** அன்று பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) வரவேற்கப்படுகிறது. கீழ்க்கண்ட பணிகளுக்கு (இரு உறைகள் முறை) முன்தகுதி காணலுக்கான ஆவணங்கள் மற்றும் முன்வைப்புத் தொகை தனி உறையிட்டது மற்றும் வேலைகளுக்கான சதவீத ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தனி உறையிட்டு மேலுறையிட்டது (இரு உறைகள் முறை) வரவேற்கப்படுகிறது.

மேற்கண்ட ஒப்பந்த அழைப்பில் முன்தகுதி காணலுக்கான படிவத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்புடைய ஒப்பந்தக்காரர்கள் மற்றும் இத்துறையில் பதிவுபெற்ற மாநில அளவிலான ரூ.25.00 இலட்சத்திற்கு மேல் பண வரம்புடன் கூடிய முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் மட்டும் போட்டிக்கு தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

| வ எ ண | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பீட்டு தொகை (ரூபாய்) | முன் வைப்புத் தொகை (ரூபாய்) | பணி முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்த படிவம் கிடைக்கும் இடம் |
|---|---|---|---|---|---|
| **விரிவான சாலை உள்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் 2005 - 2006**<br>இரண்டாம் அழைப்பு | | | | | |
| *கோவை (நெ) கோட்டம்*<br>*மாநில சாலைகள்* | | | | | |
| 1 | *திருப்பூர் (நெ) உட்கோட்டம்*<br>அவிநாசி – திருப்பூர் – பல்லடம் – பொள்ளாச்சி – கொச்சின் சாலை (வழி) மீன்கரை சாலை கி.மீ. 5/0 – 6/0 மற்றும் 7/500—10/0 வரை அகலப்படுத்தி மேம்பாடு செய்தல். | 167.00 | 94,000 | 6 மாதங்கள் | கோட்டப் பொறியாளர் (நெ) கோவை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ***பொள்ளாச்சி (நெ) கோட்டம்***<br>***மாவட்ட முக்கிய சாலைகள்*** | | | | | |
| 2 | பல்லடம் (நெ) உட்கோட்டம்<br>காட்டாம்பட்டி – கொடுவாய் சாலை கி.மீ. 0/0 – 4/8 மற்றும் 5/0–7/9 வரை அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் | 132.50 | 77,000 | 6 மாதங்கள் | கோட்டப் பொறியாளர் (நெ) பொள்ளாச்சி |
| ***உடுமலைப் பேட்டை (நெ) உட்கோட்டம்*** | | | | | |
| 3 | பொள்ளாச்சி – தராபுரம் – கரூர் சாலை கி.மீ. 10/4–15/0, 16/0–17/0, 18/3–18/4, 18/6–21/454 & 22/430–24/879 வரை மேம்பாடு செய்தல். | 160.00 | 90,000 | 6 மாதங்கள் | கோட்டப் பொறியாளர் (நெ) பொள்ளாச்சி |

ஷெட்டியூல்டு வங்கியிலிருந்து வழங்கப்பட்ட வைப்புத் தொகை ரசீது டிமாண்ட் டிராப்ட் மற்றும் ரத்து செய்ய முடியாத வங்கி உத்திரவாதம் மற்றும் அஞ்சலக சேமிப்பு பத்திரங்கள் முதலியன சம்மந்தப்பட்ட கோட்டப் பொறியாளர் (நெ) பெயரில் ஈடு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும் முதிர்வு பெறாத இந்திர விகாஸ் பத்திரங்கள் முன்வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். சம்மந்தப்பட்ட கோட்டப் பொறியாளர் (நெ) பெயரில் ஈடு செய்யப்படாத முன்வைப்புத் தொகைகள் ஏற்றுக் கொள்ளப்படாததுடன் ஒப்பந்தப்புள்ளியும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

மேற்கண்ட பணிகளுக்கு முன்தகுதி காணலுக்கான ஆவணம் மற்றும் பட்டியலிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சம்மந்தப்பட்ட கோட்டப் பொறியாளர் (நெ) அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பின்கீழ் சம்மந்தப்பட்ட கோட்டப் பொறியாளர் (நெ) அவர்களது எல்லைக்குட்பட்ட அரசு கருவூலததில் செலுத்தி (திருப்பித் தரமாட்டாது) செல்லுச் – சீட்டுடன் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ***1.8.2005*** வரை எழுத்து மூலமாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அவரது பிரதிநிதி மூலமாகவோ விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை மற்றும் விற்பனை வரிக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை ஷெட்யூல்டு வங்கிகளிலிருந்து சம்மந்தப்பட்ட கோட்டப்பொறியாளர் (நெ) பதவியின் பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை வடிவத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும்

தொகை செலுத்தவேண்டிய கணக்குத் தலைப்பு

| | |
|---|---|
| *ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை*<br>*ரூ.5,000/–* | 8658 Highways suspense account III other receipts to the credit of the Divisional Engineer (H) concerned |
| *விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ்*<br>*ரூ. 630 /–* | 0040 Sales Tax |

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் பதிவு அஞ்சலிலோ, கூரியர் மூலமாகவோ பெற விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் தமது விருப்பத்தினை எழுத்து மூலம் தெரிவிப்பதோடு நமூனாவுக்குரிய கட்டணத்தை மேற்கூறிய முறையில் செலுத்தி அதற்கான ரசீது இணைத்து அனுப்பி வைத்தால் அவர்களது சொந்த தபால் செலவு மற்றும் பொறுப்பில் ஆவணங்கள் அனுப்பி வைக்கப்படும். இதனால் ஏற்படும் காலதாமத்திற்கு கோட்டப் பொறியாளர், (நெ) எந்தவிதத்திலும் பொறுப்பு ஏற்கமாட்டார்.

பூர்த்தி செய்யப்பட்ட முன் தகுதி காணலுக்கான ஆவணம் மற்றும் பட்டியலிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தபால் மூலமாகவோ அல்லது கூரியர் மூலமாகவோ அல்லது தனிநபர் மூலமாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கண்காணிப்புப் பொறியாளர் (நெ) கோவை—18 அவர்களின் அலுவலகத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்படுவதற்கான நிர்ணயிக்கப்பட்ட காலமான ***4.8.2005*** அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் பெறத்தக்க வகையில் அனுப்பப்படவேண்டும். அவ்வாறு உரிய நேரத்தில் பெறப்படாத ஒப்பநதப்புள்ளிகள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். கூரியர் அஞ்சல், தனிநபர் ஆகியோர் மூலம் ஏற்படும் காலதாமதத்திற்கு இத்துறை எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

பூர்த்தி செய்யப்பட்ட முன் தகுதி காணலுக்கான ஆவணம் மற்றும் பட்டியலிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), கதவு எண்.1653, நெடுஞ்சாலை வளாகம், திருச்சி சாலை, கோவை—18 என்ற முகவரியிலுள்ள அவர்களது அலுவலகத்தில் ***4.8.2005*** அன்று பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) பெற்றுக் கொள்ளப்படும். அதில் முன்தகுதி ஆவணங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் ***4.8.2005*** அன்று பிற்பகல் 3.15 மணியளவில் வருகை தந்துள்ள ஒப்பந்தககாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். முன்தகுதி காணலில் தேர்வு செய்யப்பட்ட பின்னர் விலை புள்ளி ஆவணங்கள் திறக்கப்படுவதற்கான தேதி தகுதியுடைய ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் பின்னர் அறிவிக்கப்பட்டு திறக்கப்படும் மற்றவர்களின் விலைப்புள்ளி ஆவணங்கள் திற்ககப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.

***குறிப்பு***

1) கண்காணிப்புப் பொறியாளர் (நெ) கோவை—18 அவர்களுக்கு எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளைுயம் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க முழு அதிகாரம் உண்டு.

2) நடப்பு ஆண்டு விற்பனைவரி செலுத்தியதற்கான நிலுவையில்லா சான்றிதழை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கவேணடும்.

3) மேற்காணும் சாலைகள் மற்றும் வேலைகள் பற்றிய விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர்களை தொடர்பு கொள்ள வேண்டும்.

4) ஒப்பந்தக்காரர்கள் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்துகொள்ளாமலோ அல்லது மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெற்று ஒபபந்த அழைப்புகளில் கலந்து கொள்ளாமல் விட்டாலோ அவர்களது பதிவு இரத்தாகும்.

5) மைய சுடுகலவை இயந்திரம் மற்றும் பேவர் பினிசர் இயந்திரங்கள் சொந்தமாக வைத்திருப்பதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி நமூனா வழங்கப்படும்

## *முன்தகுதி காணலுக்கான குறைந்தபட்ச தகுதிகள்*

1) ஒப்பந்தகாரர்கள் அதே பெயரிலும் அதே ஒத்த தன்மையுடைய விவரங்களுடன் (Same name and style) கடந்த ஐந்தாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் தற்பொழுது ஒப்பந்தப்புள்ளி கோரும் வேலையில் 40% மதிப்பிற்கு வருடாந்திர வேலை செய்து முடித்த அளவுடன் (Annual Turnover) அதாவது முன்னேற்றத்தில உள்ள அல்லது செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியல் பெற்று சாதித்திருக்க வேண்டும்.

2) ஒப்பந்தக்காரர்கள் அதே பெயரிலும் அதே ஒத்த தன்மையுடைய விவரங்களுடன் (Same name and style) முதன்மை ஒப்பந்தக்காரர்களாக இருக்கும்பட்சத்தில் கடந்த ஐந்து வருடத்தில் தற்பொழுது ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் வேலையின் மதிப்பில் 40% அளவிற்கு ஒரு வேலையை முடித்திருக்க வேண்டும்.

3) கடந்த ஐந்து வருடங்களில் ஏதாவது ஒரு பணியில் தற்போது முன்தகுதி ஆவணங்கள் கேட்கப்பட்ட பணியின் ஒத்த தன்மையுடைய முக்கிய இனங்களில் (Major Terms) 40% பணிகள் முடித்திருக்க வேண்டும் என்பது முன் அனுபவத்திற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

4) ஒப்பந்தக்காரர்கள் இவ்வேலையை முடிப்பதற்கு போதுமான கருவி தளவாடங்கள் வைத்திருக்க வேண்டும்.

5) ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்த வேலையை செயல்படுத்தும் வகையில் பொருள் திறன் (Bid capacity) கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6) இணை முயற்சியுடன் (Joint Venture) கூடிய ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கண்காணிப்புப்பொறியாளர்,
(நெ), கோவை—18

/ உண்மை நகல் /

கண்காணிப்புப்பொறியாளருக்காக,
(நெ), கோவை—18